// விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-3, இதழ்-4, ஜனவரி - 2010 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிக்கை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு

[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]

**தம்ம வாக்கு**

**கிச்சோ மனுஸ்ஸபடிலாபோ, கிச்சங் மச்சான ஜீவிதங்;**
**கிச்சங் ஸத்தம்மஸ்ஸவனங், கிச்சோ புத்தானமுப்பாதோ.**

**மனிதனாக பிறப்பது அரிதே! கடினமானதே இறப்பிற்குரிய இவ்வாழ்வு.**
**தம்மத்தை கேட்டறிவதும் அரிதே! புத்தர்களின் தோற்றமும் அரியதே!**

தம்மபதம் - 182

# மதம் பிடித்த யானை நாளாகிரி

**திரு. சத்ய நாரராயண கோயங்கா**

ஸமாதி(மனக்குவிப்பு) பயிற்சியினால் தேவதத்தர் பல வகையான அதியியற்கை சக்திகளைப் பெற்றிருந்தார். தேவதத்தரின் புகழும் அகந்தையும் பெருகியது. அவர் பிக்ஷு சங்கத்தின் தலைவராவதற்காக பேராசைக் கொண்டார். ஆனால், இந்த முயற்சியில் வெற்றியடையாததைக் கண்ட அவர் பகவான் புத்தரைக் கொலை செய்வதற்கான ஒரு தீய உறுதியை (சங்கல்பத்தை, தீர்மானத்தை) எடுத்துக்கொண்டார்.

இதை நிறைவேற்ற எடுத்த இரண்டு முயற்சிகளிலும் தோல்வியைத் தழுவிய அவர், இப்போது பகவான் புத்தரைக் கொல்ல இன்னொரு திட்டத்தைத் தீட்டினார். அந்நாட்களில், யானைக்காப்பகத்தில் நாளாகிரி என்ற பெயர் கொண்ட மதம்பிடித்த, சினம் கொண்ட, பலம் மிகுந்த யானை ஒன்று இருந்தது. மனிதர்களுக்குத் தீங்கிழைக்கும் குணத்தை அது இயல்பாகவே கொண்டிருந்தது. ஆதலால், அதனைக் கட்டி வைத்திருந்தனர். புத்தர் பிக்ஷைக்காக நகரத்தில் நுழையும் பொழுது, அவர் எந்தப் பாதையில் செல்கின்றாரோ, அவரை நசுக்கி கொலை செய்வதற்காக, இந்த மதம் பிடித்த யானையை அதே பாதையில் ஓடவிடுவது என்ற ஒப்பந்தத்தைத் தேவதத்தர் யானைக்காப்பாளர்களிடம் செய்திருந்தார்.

யானைப் பாகர்களும் தேவதத்தரின் ஆணையை கடைப்பிடித்தனர். பகவான் புத்தர் பிக்ஷைக்காக ஆயத்தமாகி சென்ற பொழுது, அந்தச் சாலையில் சினங்கொண்ட அந்த நாளாகிரியை அவிழ்த்துவிட்டனர். அது தன் துதிக்கையை எழுப்பிக்கொண்டு, இரண்டு காதுகளையும் அடித்துக்கொண்டு, பிளிறிக்கொண்டே பகவான் புத்தரை நோக்கி விரைந்தது. பிக்குகளும் பகவானை பாதையிலிருந்து விலகிக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், பகவானோ, பயமின்றியும், நடுக்கமின்றியும், அமைதியான மனதுடன் வீதியில் முன்னேறிக்கொண்டே சென்றார். பகவான் பயத்திலிருந்து பூரண விடுதலை பெற்றவராயிற்றே! வீதபயவாயிற்றே!

அவர் முன்னேறிக்கொண்டே இருந்தார், முன்னேறிக்கொண்டே இருந்தார். சினம் கொண்ட யானை அவர் அருகில் வந்துகொண்டே இருந்தது, அருகில் வந்துகொண்டே இருந்தது. அது கர்ஜித்துக் கொண்டு, துதிக்கையை உயர்த்திக்கொண்டு காதுகளை அடித்துக்கொண்டே இருந்தது. அது கோபத்தில் இருந்ததால், மிகவும் பதற்றமாகவும் துயருற்றும் இருந்தது. அதை அமைதிப்படுத்தவும் மகிழ்விக்கவும் பகவான் புத்தரின் இதயத்திலிருந்து கருணையின் நீரூற்று பொங்கி வழிந்தது. சினம் கொண்ட யானையின் மீது அளவுகடந்த கருணை அலைகளின் குளிர்ந்த தூறல் பொழிந்தன. மதம்பிடித்த யானையைக் கருணையின் அலைகள் தொடத்தொட, அவ்வாறே அதன் கோபம் தூர விலக தொடங்கியது, பைத்தியக்காரத்தனமும் விலகத் தொடங்கியது. அது அமைதி அடையத் தொடங்கியது. துன்பத்திலிருந்து விடுதலை அடையத் தொடங்கியது. அது பகவான் புத்தர் அருகில் வந்தடைந்து, தமது துதிக்கையைத் தாழ்த்தி அவர் முன்னே மண்டியிட்டது. தாய் அன்புடன் பகவான் புத்தர் தனது கைகளால் யானையின் உச்சந்தலையைத் தழுவினார். மதம்பிடித்த, சினம் கொண்ட அந்த யானை பகவானின் கருணை அலைகளால் தெளிக்கப்பட்டு(அபிஷிக்கப்பட்டு), அவரது தாய் அன்பு மிக்க தழுவலால் இன்ப பரவசம் அடைந்தது. அது பகவானின் பாதத்தின்

அருகிலிருந்த புழுதியைத் துதிக்கையால் எடுத்து தன் தலையிலே போட்டுக்கொண்டு எழுந்து நின்றது. அது பெரும் கருணை கொண்ட பகவானின் திருமுகத்தைப் பார்த்தபடியே, திரும்பாமலே பின்நோக்கிச் சென்றது. இவ்வாறு, பகவானின் திருமுகத்தின் தரிசனம் இருக்கும் வரை அது பின்நோக்கியே நகர்ந்து கொண்டிருந்தது.

சினம் கொண்டவரின் அடக்குதல் 'மெத்தா' அதாவது கருணையன்பால் ஏற்பட்டது. அப்போதே வெற்றி ஏற்பட்டது, சரியான வெற்றி ஏற்பட்டது.

**மெத்தம்புஸேகவிதினா ஜிதவா முனிந்தோ**
**(ஜயமங்கள-அட்டகாதா)**

அந்த மதயானை நாளாகிரியை முனிவர்களில் தலைசிறந்தவரான பகவான் புத்தர் அன்பு அலைகளின் பொழிவினால் வெற்றியடைந்தார். இதுவே நலன் தரும் வெற்றி ஆயிற்று.

---

**சப்பே தஸபலூபேதா, வேஸாரஜ்ஜேஹுபாகதா**
**(தம்ம-வந்தனா, ஆடாநாடிய சுத்தங் எ 8)**

- எவரெல்லாம் ஸம்மா ஸம்புத்தராக ஆகின்றாரோ அவர்கள் அனைவரும் பயத்திலிருந்து விடுபட்டவராக இருப்பர். பகவான் கௌதம புத்தரும் அவ்வாறே பயத்திலிருந்து முழு விடுதலையை அடைந்திருந்தார். நாளாகிரியின் கர்ஜனை அவரை சிறிதளவும் பதற்றமடையச் செய்யவில்லை.

**மஹாகாருணிகா தீரா, ஸப்பேஸானங் ஸுகாவஹா.**
**(தம்ம-வந்தனா, ஆடாநாடிய சுத்தங் 12)**

அவர்கள் அனைவரும் பொறுமை உள்ளவர்களாகவும், பெரும் கருணையுள்ளவர்களாகவும் இருப்பர். உயிரினங்கள் அனைத்தினிடத்தும் அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். பகவான் புத்தர் பெறும் கருணைநிறைந்தவராக இருந்தார். தமது அளவுகடந்த கருணையின் மூலம் கோபத்தால் துன்புற்றிருந்த நாளாகிரிக்காக மகிழ்ச்சியைப் பொழிந்தார்

# சாக்கியர்களும் கோலியர்களும்

பகவான் புத்தரின் வாழ்நாளில் இக்கட்டான சூழ்நிலை ஒன்று உருவானது. வெப்பத்தின் பருவ காலமாக இருந்தது. ரோஹினி நதியின் நீர் மட்டம் மிகவும் குறைந்து காணப்பட்டது. வெப்பத்தின் காரணமாக நதியின் இரு கரைகளிலும் உள்ள நிலங்கள் வறண்டு காணப்பட்டன. நீர் பாசனம் செய்யாவிட்டால் வயல்கள் அழியக்கூடிய அபாயத்தில் இருந்தன. நதியின் ஒரு கரையிலுள்ள வயல்களில் மட்டுமே பாசனம் செய்யக்கூடிய அளவிற்கு அணைக்கட்டில் உள்ள நீர் மட்டம் குறைந்திருந்தது. இவ்வாறு இருந்தால் மறுகரையின் பயிர்கள் நிச்சயம் அழியக்கூடியது தான்.

அணைக்கட்டிலுள்ள நீரை சமமாக பகிர்ந்துகொண்டால், நதியின் இரு பக்கத்துப் பயிர்களும் போதிய நீர் கிடைக்காத காரணத்தால் வாடிப்போய் விடும். நீர் அனைத்தையும் ஒரு பக்கத்திலுள்ள வயல்களில் மட்டும் பாய்ச்சினால், குறைந்தபட்சம் அப்பயிர்களாவது பிழைத்துவிடும்.

ஆதலால், இதைப் பற்றி கலந்துரையாட, சாக்கிய மற்றும் கோலிய விவசாயிகள் ஒருவரை ஒருவர் சந்தித்தனர். பிரத்தியேக(ஒவ்வொரு) குழுவினரும் தங்கள் பயிர்கள் காப்பாற்றப்பட வேண்டும் என்றும் இதில் வரும் விளைச்சலில் மறுபக்கத்தில் உள்ளவர்கள் ஒரு பங்கை கேட்டுப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் வற்புறுத்தினர். ஆனால், யார் பங்கை கேட்கபோகிறார்கள்? இரு பக்கத்தினரும் மிகுந்த தன்மானம் நிறைந்தவர்கள். இதனால், விவசாயிகளின் வாதங்களும் சூடுபிடித்தன. விரைவில், நிலைமை சீர்கெட்டு, இருகுழுவினரும் முதலில் வசை மொழிகளிலும், பின் அடிதடியிலும் இறங்கினர். இருவரும் மற்றொருவரின் முதலாளிகளை இழிவுபடுத்தினர். இருவரும் அரச குலத்தின் மூதாதையர்களைப் பற்றி தகாத வார்த்தைகளாலும் அநாகரீகமான வார்த்தைகளாலும் பழி கூறினர். ஒரு சில விவசாயிகள் தங்கள் முதலாளிகளிடம் சென்றனர். இரு பக்கத்தினரும் தங்கள் மூதாதையர்களைப் பற்றிய வசை மொழிகளைக் கேட்டதும் சண்டை இன்னும் அதிகரித்தது. விவகாரம் அதிகாரிகள் வரையிலும் அமைச்சர்கள் வரையிலும் சென்றது. பிறகு, அங்கிருந்து இளவரசர்கள் வரையிலும் அரசர்கள் வரையிலும் வந்தடைந்தது. இருபக்கத்திலும் உள்ள இளம் அரச குமாரர்கள் தங்கள் முன்னோர்கள் பற்றிய வசை மொழிகளின் விவரத்தை அறிந்தவுடன் அவர்களின் இரத்தம் கொதித்தது. எங்கள் முன்னோர்களை இகழ்ந்ததற்காக நாங்கள் இதற்கு பழிவாங்குவோம் என்று கோபத்தால் கொந்தளித்த அவர்கள், கையில் வாள், ஈட்டி போன்றவற்றை ஏந்திக்கொண்டு தங்கள் பகுதியின் நதிக்கரையில் ஒன்று சேரத்தொடங்கி ஒருவரையொருவர் போருக்கு வருமாறு சவாலிட்டுக்கொண்டிருந்தனர். இந்தப் பயங்கரமான சூழ்நிலை ஒரு இரத்தக்களரியின் அபாயத்தைத் தோற்றுவித்தது. பகவான் புத்தர் இதனை அறிந்ததும், தாமே அவ்விடத்திற்கு விரைந்தார். தங்கள் வம்சத்தைச் சேர்ந்த இந்த வணங்குதலுக்குரிய மகா புருஷரைக் கண்டதுமே இரு தரப்பினரின் போராளிகளும் சமாதானம் அடைந்தனர். தங்களது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு அனைவரும் பகவான் புத்தரை வணங்கினர். இது அந்நாளின் நடைமுறை வழக்கமாக இருந்தது.

பகவான் அவர்களுக்குத் தம்ம உபதேசத்தை அருளினார். வன்முறையின் துர்க்குணத்தைப் பற்றியும் சமாதானத்தின் நற்குணத்தைப் பற்றியும் எடுத்துரைத்தார். நதியின் நீரை விட சாக்கிய மற்றும் கோலிய இளைஞர்களின் இரத்தம் அதிக மதிப்பு வாய்ந்தது என்று அவர்களுக்குப் புரிய வைத்தார். எந்தவொரு மனிதரின் செந்நீரும் அதிக மதிப்புடையது தான். அதை சிந்த வேண்டாம். இருபக்கத்தின் போராளிகளும் தலை குனிந்தனர். போர் தவிர்க்கப்பட்டது. இரத்த களறி எதுவும் நிகழவில்லை.

## கேள்வி பதில்

**1. 'நான்', 'எனது' ஆகிய அகந்தையைப் பற்றியும் விருப்பு பற்றியும் நீங்கள் கூறினீர்கள். நான் எனது விருப்பத்தின் மீது மிகுந்த பற்றுள்ளவன். அதே நேரத்தில், அதை விட்டுவிட தடையுள்ளது. அந்த தடையையும் நான் கவனிக்கிறேன்.**

ஆம். ஏனெனில், இவ்வளவு காலம் இது தான் பழக்க பின்னலாக இருந்தது. காலங்காலமாக விருப்பத்தின் மீது பற்றுடன் இருந்து வருகிறீர்கள். ஆகையால் அதிலிருந்து வெளிவருவது கடினமாகிறது. ஆனால், நீங்கள் இந்த உணர்ச்சிகளை கவனித்துக் கொண்டேயிருந்தால் இயல்பாக நீங்கள் அந்த பழக்கத்திலிருந்து வெளிவருகிறீர்கள். வெளிவர நீங்கள் எந்த முயற்சியும் எடுக்க வேண்டாம். அது தாமாகவே நடக்கும். உங்கள் உணர்ச்சிகளை நீங்கள் கவனித்துக் கொண்டேயிருங்கள். அது தாமாகவே நிகழும்.

**2. கோயங்கா அவர்களே, நான் மூன்று வருடங்களாக மந்திர ஜபம் செய்து வந்தேன். இப்போது தான் அதிலிருந்து வெளியேறினேன். மந்திரங்கள் ஏன் ஆழமான ஸங்காரங்களை எடுக்க முடியாது என்று நீங்கள் கூறுகிறீர்கள்?**

நீங்கள் உச்சரிக்கும் ஒவ்வொரு மந்திரமும், ஒவ்வொரு வார்த்தையும் ஒரு அதிர்வலை தான். நீங்கள் மீண்டும் மீண்டும் ஒரு வார்த்தையை உச்சரிக்கும் போது, ஒரு செயற்கை அதிர்வலைகளை உருவாக்குகிறீர்கள். அது இயற்கையான அதிர்வலை அல்ல. இப்படிப்பட்ட அதிர்வலையின், ஒரு நல்ல அடுக்கு உங்கள் மனதின் மேல் மட்டத்தில் உருவாகிறது. ஆனால், இயற்கையான அதிர்வலையை உணர முடியாத படி இந்த அடுக்கு ஒரு தடையாக அமைகிறது. இவ்வளவு செயற்கை அதிர்வலைகளை நீங்கள் உருவாக்கினால், எப்படி நீங்கள் இயற்கையான அதிர்வலைகளை உணர முடியும்? ஆதலால் தான் இது விபஸ்ஸனா பயிற்சியுடன் ஒத்துபோவதில்லை. விபஸ்ஸனாவில் எல்லாம் இயற்கையே. என்ன நிகழ்கிறதோ அதனை நீங்கள் கவனித்துக்கொண்டே இருக்கிறீர்கள். ஆகையால், உங்களுக்கு கோபம் வரும் போதோ அல்லது பயம் வரும் போதோ அல்லது காமம் உள்ள போதோ நீங்கள் உணர்ச்சிகளை கவனிக்க முடிகிறது. இந்த மனவழுக்குகளிலிருந்து வெளிவருவது தான் மிக முக்கியமானது. மேல்மட்ட மனதில் ஒரு நல்ல அதிர்வலைகளின் அடுக்கை போடும் போது, நிச்சயம் அதனால் மனம் மகிழ்வடையும். ஆனால், ஆழ் மட்டத்தில் இன்னும் அதே பழைய பழக்க பின்னல் நிச்சயம் இருக்கும்.

**3. இந்த முகாமை முடித்த பிறகு, நான் மற்ற தியான பயிற்சிகளை செய்யவே கூடாதா அல்லது வெவ்வேறு நேரங்களில் செய்யலாமா? உங்கள் பரிந்துரை என்ன?**

முதல் விஷயம் என்னவெனில், இந்த பயிற்சி முகாமை முடித்தவுடன், இந்த பயிற்சி உங்களுக்கு உகந்ததா இல்லையா என்று நீங்கள் முடிவெடுக்க வேண்டும். இந்த பயிற்சி உகந்ததாகவும், பயனுள்ளவையாகவும் உங்களுக்கு தெரிந்தால், அப்போது நீங்கள் மற்ற பயிற்சிகளை விடத் தான் வேண்டியிருக்கும். ஆனால், தற்போதைக்கு, நீங்கள் இந்த பயிற்சிக்கும் மற்ற பயிற்சிக்கும் ஒரு பெரிய நேர இடைவெளி விட வேண்டும். நீங்கள் பாதையில் வளரும் போது, நீங்கள் இதையோ அல்லது அதையோ விட்டுவிட தான் வேண்டும். இரண்டும் சேர்ந்து செல்ல இயலாது. இதை நீங்கள் மனதில் நிறுத்திக்கொள்ள வேண்டும்.

**கோவையில் ஒவ்வொரு வாரமும் ஒரு மணி நேர கூட்டுத் தியானம் நடைபெறுகிறது. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: திரு. பரத் ஷா, சங்கம் ஸ்டோர்ஸ், 26/932 RG தெரு, பூ மார்கெட் அருகில், கோவை 641001, தொலைபேசி 2472441, 9842347244**

<u>புதுவையில் 10-நாள் விபஸ்ஸனா தியான முகாம் (பெண்களுக்கு மட்டும்):</u> தேதி: 16/2/2009.
**இடம்: இதயா ஆசிரமம், அரியாங் குப்பம், புதுவை. பதிவு செய்ய அனுகவும்: திருமதி விஜயலட்சுமி, 9940467453**

RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07
REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/08-10

[நவம்பர்-2009 விபஸ்ஸனா செய்தி மடலில், சில எழுத்துப் பிழைகள், அச்சிட்டின் பொழுது ஏற்பட்டிருந்தது. இதற்காக நாங்கள் வருந்துகிறோம்.]

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2010

விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, தொலைபேசி: 044-24780953, 24780952

| மாதம் | 10-நாள் | ஸதிபட்டான | சிறப்பு பத்து நாள் | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | குழந்தைகள் முகாம் | தம்ம சேவை பயிற்சி வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 2-13<br>20-31 | | | | | 14-17 | 31st | |
| பிப்ரவரி | 18-<br>1(Mar) | 6-14 | | | | 3-6 | | 14th |
| மார்ச் | | | 25-5(Apr) | 5-26 | 5-5(Apr) | | | |
| ஏப்ரல் | 8-19<br>22-<br>3(May) | | | | | 8-11 | | |
| மே | 19-30 | | | | | 6-9 | 10th<br>15-16<br>30th | 9th |
| ஜூன் | 3-14 | 19-27 | | | | 3-6<br>16-19 | | |
| ஜூலை | 1-12<br>21-<br>1(Aug) | | | | | 1-4<br>15-18 | 18th | |
| ஆகஸ்ட் | 5-16<br>19-30 | | | | | 5-8<br>19-22 | 1st | 15th |
| செப்டம்பர் | 2-13<br>30-<br>11(Oct) | 18-26 | | | | 2-5 | 26th | |
| அக்டோபர் | 14-25 | | | 31-21(Nov) | 31-<br>1(Dec) | 14-17 | | |
| நவம்பர் | | | 20-1(Dec) | | | | | |
| டிசம்பர் | 2-13<br>16-27 | | | | | 2-5 | 30-31 | 13th |

**சந்தா-காலம் நிறைவு பெற்றவர்களுக்கு ஓர் வேண்டுகோள்:** தங்களது சந்தா காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்க விரும்புபவர்கள், தங்கள் ஆண்டுச் சந்தாவை கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பணவிடை(MO) மூலமாக செலுத்தலாம். **முகவரி:** விபஸ்ஸனா செய்தி மடல், c/o: திரு. வீ. சந்தானகோபாலன், T2, அக்ஷயா ஃப்ளாட்ஸ், 55 - இருசப்ப தெரு, திருவல்லிகேனி, சென்னை - 600005

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Posted on: 12/01/2010
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

அனுப்புனர்: Vipassana Meditation Centre
T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 ☎: 044-24780953, 24780952
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vridhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org